சக்கிலிகள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 07 வியாழக்கிழமை (22-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 236

# இனப்பிரச்சினையை ஆராயும் தெரிவுக்குழு கலைக்கப்படலாம்

## பயன் எதுவுமில்லை எனக் கருத்து

கொழும்பு, ஜூலை 22

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கு அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு கலைக்கப்படலாம் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்றுக் கூடியதாகவும், அதன் பின்னர் குழுவைக் கலைப்பதற்கான சாத்தியங்கள் தென்பட்டதாகவும் வெரித்தாஸ் தெரிவித்தது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமாக அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மங்கள முனசிங்கா தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு 1991 ஆகஸ்டில் நியமிக்கப்பட்டது.

இப்போது இணைந்திருக்கும் வடக்கு - கிழக்கைப் பிரித்துத் தனித்தனி சமஷ்டி அலகுகளை நிறுவவேண்டும் என தெரிவுக்குழு தயாரித்த முதலாவது மதிப்பீட்டு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து தமிழ்க் குழுக்கள் தெரிவுக்

(5ஆம் பக்கம் பார்க்க)

## அனுரா மீதான நடவடிக்கை விலக்க சிறிமாவோ மறுப்பு

### அரசியல், வர்த்தக பிரமுகர்கள் முயற்சி தோல்வி

கொழும்பு, ஜூலை 22

அனுரா பண்டாரநாயக்காவைச் சுதந்திரக் கட்சியில் இருந்து இடைநிறுத்தும் தீர்மானத்தை விலக்கிக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா நிராகரித்துள்ளார்.

திருமதி பண்டாரநாயக்காவுக்கு மிகவும் நெருங்கிய வர்த்தகர்கள் மற்றும் அரசியல்வாதிகள் கொண்ட குழு ஒன்று நேற்று கொழும்பு றொஸ்மிட் பிளேஸில் வைத்து அவரைச் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்தது.

கட்சியின் ஒழுங்கு, கட்டுப்பாடுகளை மீறிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணை நடத்தி தீர்ப்பு வழங்கப்படும் என்றும், விசாரணை எதுவும் நடத்தாமல் தீர்மானம் எடுப்பது கட்சியின் பெரும்பாலானோரின் விருப்பத்துக்கு மாறானதாக இருக்கும் என்றும் திருமதி பண்டாரநாயக்கா தம்மைச் சந்தித்த குழுவினரிடம் விளக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அனுராவுக்கு எதிரான குற்றப் பத்திரிகை தயாரிப்பதில் கட்சியின் சிரேஷ்ட சட்ட வல்லுநர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று கட்சியின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

அடுத்த வாரம் அளவில் குற்றப் பத்திரிகை அனுராவிடம் கையளிக்கப்படும் என்றும் இதனை விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டு குழுவின் அறிக்கையை வைத்து கட்சியின் மத்திய செயற்குழு இறுதி முடிவு எடுக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[இ-6]

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூலை 22

அரச ஊழியர்களுக்கு வழங்குவதாக அறிவித்த சம்பள அதிகரிப்பை அரசு திடீரென நிறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு 'லிப்ரன்' சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் பலரும் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

சம்பள அதிகரிப்பை மீள வழங்குமாறும், அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கோஷம் எழுப்பியதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

(இ-5-6)

### அனுரா ஆதரவாளர்களின்

## அரசமைப்பு திருத்த சட்டநகல் தெரிவுக் குழுவின் பரிசீலனைக்கு

கொழும்பு, ஜூலை 22

அனுரா ஆதரவாளரான சுதந்திரக்கட்சி எம்.பி டாக்டர் நெவில் பெர்னாண்டோ சமர்ப்பித்துள்ள அரசமைப்புக்கான 17 ஆவது திருத்தச் சட்ட நகல், அரசமைப்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களை ஆராய நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இத்திருத்தச் சட்ட நகல் குறித்து தெரிவுக்குழுவே முடிவு செய்யும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எம்.பிக்கள் கட்சி மாறுவதை அனுமதிக்கும் வகையில் இத்திருத்தச் சட்டம் அமைந்துள்ளது.

இந்த திருத்தச் சட்டநகலை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றும் முயற்சியில் அனுரா அணியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

(இ-எ)

## மண்ணெண்ணெய்யுடன் ருகுணு வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 22

ஆயிரத்து 125 பரல் மண்ணெண்ணெய்யுடன் "ருகுணு" கப்பல் நேற்று முற்பகல் பருத்தித்துறையை வந்தடைந்தது.

கப்பலில் இருந்து மண்ணெண்ணெய் பரல்களை இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

இறக்கப்பட்ட மண்ணெண்ணெய் பரல்கள் பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக அங்கு வைத்தே ப.நோ.கூ. சங்கங்களுக்கு பங்கீடு செய்து வழங்கப்பட்டன.

இதேவேளை—

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் வேலைகளை முடித்துக் கொண்டு 'குமாரி' நேற்று மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

[இ-109-3-5]

## ஊர்காவற்றுறையில் நிலக் கண்ணி வெடி

### படையினர் தப்பி விட்டனராம்

கொழும்பு, ஜூலை 22

ஊர்காவற்றுறையில் கடந்த 4 ஆம் திகதி அமுக்கக் கண்ணி வெடி ஒன்று வெடித்தது என்றும் — அச்சம்பவத்தின் போது எவரும் காயமடையவில்லை என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

வாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தபோது அக்கண்ணி வெடித்ததாகவும் — அந்த நிலக்கண்ணி விடுதலைப் புலிகளினால் முன்னர் புதைக்கப்பட்டிருந்த ஒன்று எனவும்—

இன்னும் கண்டுபிடிக்கப்படாத பல நிலக்கண்ணிகள் ஊர்காவற்றுறையில் புதைந்த நிலையில் இருக்கலாம் என்றும் —

அவற்றைக் கண்டுபிடித்து அகற்றும் வேலையை புதிதாக மேற்கொள்ள இராணுவம் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

### கறுப்பு ஜூலை நினைவாக

## தமிழ் முஸ்லிம் கைதிகள் ஒரு நாள் உபவாசம்

"கறுப்பு ஜூலை 83" இன் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் 27 ஆம் திகதி மகஸின் சிறைச்சாலையில் உள்ள தமிழ் முஸ்லிம் அரசியல் கைதிகள் துக்கம் அனுஷ்டித்து உபவாசம் இருக்கவுள்ளனர்.

சுமார் 400 தமிழ், முஸ்லிம் அரசியல் கைதிகள் அன்றைய தினம் தமது மூன்று வேளை உணவையும் அநாதை இல்லம் ஒன்றுக்கு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் சகல சக்திகளும் ஒன்றிணைந்து இந்த நாளை நினைவு கூரவேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

[இ-ப]

## மேற்கு நாடுகளில் வாழும் தமிழர் பேரணி நடத்துவர்

1983 ஜூலை வன்செயல்களை நினைவு கூரும் வகையில் ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஸ்கன்டிநேவிய நாடுகளில் எதிர்ப்புப் பேரணிகளை நடத்த ஈழம் அமைப்புக்கள் திட்டமிட்டுள்ளன.

ஈழத் தமிழ்மக்கள் வாழும் நகரங்களில் எதிர்ப்புப் பேரணிகள் நடத்தப்படும்.

பிரதான ஆர்ப்பாட்டப் பேரணியும் பொதுக்கூட்டமும் இம்மாதம் 24 ஆம் திகதி லண்டன் ட்ராபல்கார் சதுக்கத்தில் நடைபெறும்.

(அ-எ)

## ஜெயலலிதா உண்ணாவிரதத்தை நேற்றுக் கைவிட்டார்!

### போராட்டம் வெற்றி என அறிவிப்பு

சென்னை, ஜூலை 22

5-30 மணியளவில் தமது தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று மாலை [illegible] முடித்துக்கொண்டார்.

மாநில ஆளுநர் சென்னா ரெட்டி வழங்கிய பழச்சாறை அருந்தி அவர் உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்.

அச்சமயம் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் திரு சுக்லாவும் அங்கு இருந்தார்.

பெங்களூரில் கர்நாடக மாநில முதலமைச்சர் வீரப்ப மொய்லியுடன் பேச்சுகள் நடத்திய திரு சுக்லா நேற்று சென்னை வந்து முதலமைச்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது ஆண்டு நினைவஞ்சலியும் திதியும்



| தாயின் அரவணைப்பில் | இறைவன் அரவணைப்பில் |
|---|---|
| 02 | 01 |
| — | — |
| 09 | 08 |
| — | — |
| 1950 | 1992 |

## திருமதி இராசமணி குருநாதன்

திதி:- 22-07-1993

சுடர் போல பிரகாசித்தாய் உலகெங்கும்
உங்கள் திருமேனி ஒளித்ததே உலகெங்கும்
உங்கள் வாய்மொழி கேட்டு மலர்ந்தோமே
இப்போது உங்கள் நிழல்கூட தெரியாமல்
பறந்தாயே எங்கே?

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்

அன்பு கணவன், பிள்ளைகள், தந்தை, தாய்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்.

வயாவிளான் தெற்கு,
வயாவிளான்.

(6367)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி இராஜமலர்

மலர்வு: 1945-08-30 உதிர்வு: 1993-06-22

அன்பின் திருவுருவாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் வழிகாட்டிய அன்புத் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும், உங்களின் நினைவுச் சுடர் எங்களின் இதயங்களில் என்றும் அணையாத தீபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்

பிள்ளைகள், சகோதரங்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்.

குளமங்கால்,
மல்லாகம்.

தற்காலிக முகவரி:
நாச்சிமார் கோவில் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(6361)

# ஆலயங்களில்

யாழ். அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை நடைபெறும்.

நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (ஒ-17)

0 0 0

ஆவரங்கால் ஸ்ரீ நடராஜ இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தான பர்வத பத்தினி அம்பாள் உற்சவ தேர்த் திருவிழா இன்றும், தீர்த்தத் திருவிழா நாளையும் நடைபெறும். (உ-11)

o o o

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் ஸ்ரீதுர்க்கை அம்மன் அலங்கார உற்சவத்தில் இன்று வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும், ஆடிப்பூர ருது சாந்தி விழாவும் நடைபெறும். (க)

o o o

நீர்வேலி வாய்க்கால்கரையைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

பன்னிரண்டு நாட்கள் நடைபெறும் உற்சவ காலத்தில் மூத்த சமய விரிவுரையாளர் செஞ்சொற்கொண்டல் பிரம்மஸ்ரீ சபாரத்தின ஈஸ்வரசர்மா தொடர் தெய்வீக சொற்பொழிவு நிகழ்த்துவார்.

தினமும் மாலை 7 மணி முதல் இரவு 8 மணி வரை 'கூடல் அழகர் ஆடல் காண்போம்' என்னும் பொருளில் திருவிளையாடல் புராண தொடர் சொற்பொழிவு நடைபெறும். (அ-110)

o o o

மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் அங்கணாமைக் கடவை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலய மகோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆடிப்பூரத்தன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

எதிர்வரும் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் பூரணையன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஒ)

o o o

அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும். (உ-11)

o o o

புனித யாகப்பர் ஆலய வருடாந்த நவநாள் மகோற்சவம் கடந்த 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு சற்பிரசாத ஆராதனை, சுற்றுப்பிரகாரம் என்பன நடைபெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்ளும் திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெறும். (க-51)

o o o

பனிப்புலம் அம்மன் கோவில் தேர்த்திருவிழா இன்று நண்பகல் நடைபெறுகிறது. தீர்த்தோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும். (அ-28)

o o o

சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலய சிவகாமி அம்பாள் ஆடிப்பூர விழா இன்றுபிற்பகல் 3மணி தொடக்கம் நடைபெறும். (அ-12)

# பாடசாலைகளில்

அராலி சரஸ்வதி மாணவர் பாடசாலை வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-15 மணிக்கு அராலி சரஸ்வதி மகா வித்தியாலய விளையாட்டுத் திடலில் நடைபெறும். (க 161-12)

அரியாலை

# அருள்மிகு பிரப்பன்குளம் மகாமாரி அம்பாள் தீர்த்தோற்சவம்

காலம்: நாளை (23-7-1993) வெள்ளிக்கிழமை
காலை 7.20 — வசந்தமண்டபப் பூசை
விசேட நிகழ்ச்சியாக

## பி.ப. 3 மணி - பண்ணிசைக்கச்சேரி

''ஸ்வரராக லயவினோத சுரபி''
சங்கீத பூஷணம் (1 ஆம் பிரிவு)

| | |
|---|---|
| எல். திலகநாயகம் போல் | — பாட்டு |
| வித்வான் என். கேசவமூர்த்தி | — வயலின் |
| கலா வித்தகர் க. கண்ணதாசன் | — மிருதங்கம் |
| வித்வான் வேல்மாறன் | — கடம் |

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்

திருவிழா உபயகாரர்

(26616)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## சின்னத்துரை பூபாலசிங்கம்

(இளைப்பாறிய விற்பனை முகாமையாளர்,
சீமெந்து தொழிற்சாலை காங்கேசன்துறை)

மலர்வு:- 29 04-1929
உதிர்வு:- 01-08-1992

திதி:- 22-07-1993

அன்புத்துணைவரே ஆசை அப்பாவே! மாமாவே
புன்சிரிப்புடன் கட்டியணைக்கும் பாசமிகு தாத்தாவே
தென்புடன் வேழமுகத்தனை வழிபடச் சென்றவரே
ஊனுடல் நீக்கி விண்ணகம் சென்றது ஏனையா!

தாய்க்குத் தலைமகனே உமை இழந்த வேதனையில்
தவிர்க்கின்ற தங்கையரை தம்பியரை மைத்துனரை
- நோக்காது சென்றாயே

நோய்நொடியில் அழுந்தாது மின்னல் மறைந்ததென
வாய்த்த தருணத்தில் வானுலகம் நாடியது ஏனையா!

அக்கைதனை தம்பியுடன் அனுப்பி வைக்கச் சென்றீரே
எங்கள் முதல் மருகரே அத்தானே குணக்குன்றே
உங்கள் இனிய நினைவலைகள் நிறைவேறும் முன்னே
எங்கேதான் சென்றாய் விதி செய்த சோதனை ஐயா.

ஆண்டொன்று கழிந்தாலும் சோக நினைவலைகள்
- மீட்கின்ற வேளையிலே

மீண்டொருகால் வாராயோ எம் தலைவா
அணையா ஒளிவிளக்கே பூவுலகில் பூபாலா
காண்கின்றோம் என்றென்றும் உன்னுருவம்
நீர்சொரியும் கண்களிலே

ஆத்ம சாந்திப் பிரார்த்தனையுடன்,
நினைவு கூரும்

திருமதி பூபாலசிங்கம் குடும்பத்தினர்

தி. இராஜேந்திரம்,
''ஜீவ வாசம்''
பொற்பதி வீதி,
கொக்குவில்.

(26617)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனைக்கோட்டை ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள் ஆலய

## ★ தேர்த் திருவிழாச் சிறப்பிதழ் ★

22 – 07 – 1993

## ★ வாழ்த்துரைகள் ★

### குன்றக்குடி அடிகளார்

உ

சிவ சிவ

தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே.

தவத்திரு
குன்றக்குடி அடிகளார்.

குன்றக்குடி 623206
பசும் பொன் தேவர் -
திருமகன் மாவட்டம்,
தொலைபேசி:
குன்றக்குடி 27.
நாள்: 05 06 1993.

யாழ்ப்பாணத் திருநாட்டின் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் கடுமையான பாதிப்புக்குள்ளாகி இருக்கும் நிலையிலும் வழி வழி மரபிற்கேற்ப அவர்களுடைய சமய மரபுகளை, திருத்தொண்டுகளைச் சோர்விலாது கடைப்பிடித்து ஒழுகுவது மனநிறைவைத் தரக் கூடிய செய்தி.

யாழ்ப்பாணம் கொக்குவில் ஆனைக்கோட்டைப் பகுதியில் எழுந்தருளியுள்ள அருள்தரு வீரமாகாளி அம்பாளின் திருத்தேர் உலாவருவது மகிழ்ச்சியைத் தருகிறது. இந் நிகழ்வு இனிதே நிறைவெய்த திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

இப் பணியில் ஈடுபட்டுள்ளோர் அனைவருக்கும் நன்றி! பாராட்டு! வாழ்த்துக்கள்!

இன்ப அன்பு.

- அடிகளார்.

### தங்கம்மா அப்பாக்குட்டி

அம்பிகைக்கு அமைந்த ஆயிரம் ஆயிரம் நாமங்களில் வீரமாபிடாரி என்பது ஒரு திவ்விய நாமமாகும். இந் நாமத்தை உச்சரிக்கும் போதே எம் உள்ளத்தில் பக்தியோடு நிறைந்த வீர உணர்வு பிறக்கிறது தலச் சிறப்பும், நித்திய நைமித்திக ஒழுங்குகள் கொண்ட இவ் ஆலயத்தில் மகோற்சவம் 'நடைபெறுகின்ற காலம் இதுவாகும். இச் சூழலில் வாழும் அம்பாள் பக்தர்கள் ''அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே'' என்ற நிலையில் தமது நியமங்களை நிறைவேற்றுகின்ற நாட்கள் இவை.

அன்பர்கள் பலருடைய ஆதரவினாலும், பக்தியினாலும் சமீபத்தில் உருவாக்கப்பட்ட சித்திரத் தேரில் அம்பாள் அருட் பவனி வரும் காட்சி ஆண்டு தோறும் அற்புதமானது. பக்தர்களின் அரோகரா ஒலியும் அந்தணர்களின் வேதகீதமும், கலைஞர்களின் மங்கள வாத்திய ஒலியும் வானைப் பிளக்க எம் பெருமாட்டி பிடாரி அம்பாள் திரிபுரசங்காரம் செய்து உலாவருவது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அற்புத நிகழ்ச்சியாகும்

எம் பெருமாட்டியைக் காணும் அனுபவம் எமக்கெல்லாம் கிடைக்க இருக்கும் நாள் இந் நாளே என்று கூறி அம்பிகையின் பணியில் ஈடுபடும் அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.

சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி.

தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

### மகோற்சவ பிரதம குரு

ஆலய வருடாந்த உற்சவம் ஆடிமாதம் அம்பிகைக்கு உகந்ததான பூர நட்சத்திரத்தை தீர்த்தமாகக் கொண்டு நிகழும் திருநாளாகும். அதற்கு முதல் நாளாகிய தேர் உற்சவம் மிகவும் சிறப்புப் பொருந்தியதாகும் அன்றைய தினம் அம்பிகை தேரில் ஏறி பக்தர்களுக்கு திருவருட்காட்சி கொடுப்பாள். ஆனைக்கோட்டை வாழ் மக்கள் வந்திக்கும் ஸ்ரீ வீரமாபிடாரி அம்பிகை அற்புதமும் கீர்த்தியும் மிகுந்த அன்னை தூய அறிவு, சமயப்பற்று வளமும் பொருள் வளமும் மிக்க நன்மக்கள் பலர் இச்சூழலில் வாழ்கின்றார்கள். இவ்வளவு சிறப்புமிகுந்த தேர் உலா வரும் காட்சியைக்காண இருப்பவர்கள் கண்ணும் மனமும் களிக்கட்டும்— அடியார்கள் எல்லோருக்கும் அம்பிகை திருவருள் கிடைக்கவும், பரிபாலனம் செம்மையாக நிகழவும் ஆசி கூறுகின்றேன்.

சிவாகம கிரியா தத்வநிதி
சிவஸ்ரீ ச. சோமாஸ்கந்தக்குருக்கள்
பிரதமகுரு
வேரற்கேணி கந்தசாமி கோவிலடி,

### ஆலயத்தின் குரு

இன்று உலக மாதாவாகிய அன்னை ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் சித்திரத்தேர் பவனி வந்து ஆன்ம கோடிகளுக்கு அருள்பாலிக்கின்ற நல்ல நாளாகும்.

இந்த நல்ல நாளிலே சபையார்களும், உபயகாரர்களும், பக்த கோடிகளும், ஆனைக்கோட்டை வாழ் பெருமக்கள் எல்லோரும் அஷ்ட ஐஸ்வரியங்களும் பெற்று இன்புற்று வாழ வேண்டும் என்று அன்னையின் திருவடியை வணங்கி வாழ்த்துகிறேன்.

இ. அரவிந்த சர்மா (ரமேஸ் ஐயா)

## பேரொளி வீசி அருள்புரியும் ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள்

— வித்துவான் வ. கந்தையா —

நல்லூரை இராசதானியாகக் கொண்ட தமிழ் வேந்தர்களில், தந்தை 'பரராசசேகரன்'' என்னும் பட்டத்தைச் சூடியும் பரராசசேகரரின் மகன் முடி சூடும் பொழுது ''செகராசசேகரன்'' என்னும் பட்டத்தைச் சூடியும் ஆட்சி புரிந்தனர் என்பது வரலாறு.

முதலாம் பரராசசேகரன் காலம் முதல் நல்லூர் இராசதானியில் முடிசூட்டு விழா முடிந்ததும், அரசன் இணுவிலம்பதியிலுள்ள பரராசசேகரப்பிள்ளையார் ஆலயம் சென்று ஆலயதரிசனம் முடித்துக் கொடியினைப் பெற்றுக் கொண்டு, போர் யானைகள் கட்டப்பட்டிருந்த இடமாகிய ஆனைக்கோட்டைக்கு வருவான் அங்கு தாம் விரும்பிய போர் யானையை உடன் கொண்டு, யானைகளின் கோட்டையின் கிழக்குப் பக்கத்தேயுள்ள வீரமாபிடாரி அம்பாள் ஆலயத்தை அடைந்து அக்கோயிலில் போர் வாளினைப் பெற்றுக் கொண்டு போர் யானை மீதேறி நல்லூரிலுள்ள வீரமாகாளி அம்பாளைத் தரிசித்து இராசதானியை வேந்தர் அடைவது வழமை. வீரமாபிடாரி அம்பாள ஆலயத்தில் நடைபெறும் அரசனின் ''போர் வாள்' பூசை முடிந்ததும் வீரமாபிடாரி அம்பாள் திருவதனத்தில் பேரொளி ஒன்று தோன்றுமென்பர்.


### தொன்மை மிக்கது

அண்மைக் காலத்தில் ஆனைக்கோட்டை மணல் மேடு ஒன்று செப்பஞ் செய்யப்பட்டபொழுது, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த இடம் என்பதன் அறிகுறியாக களிமண்ணினாலும் கருங்கல்லினாலும் செய்யப்பட்ட பல பொருள்களைக் கண்டுபிடித்தனர். அந்த இடத்தை அகழ்வு ஆராய்ச்சி செய்து கொள்ளும் பெரும்பணியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொறுப்பேற்றது. ஆராய்ச்சிகளில் இருந்து ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய மூல விக்கிரகத்தை பார்வையிட்டவர்கள் பலநூறு வருடத் தொன்மை வாய்ந்தது என முடிவு செய்தனர்.

இடைக்காலத்தில் என்ன நடந்ததோ தெரியாது, ஆயிரத்தி எண்ணூற்று எண்பத்தெட்டாம் ஆண்டளவில் (1888) ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாள் ஆலய மூல விக்கிரகம் வண்ணார்பண்ணை சிவன்கோவில் குளத்திற்குள் இருப்பதாக அறிந்த பெரியோர்கள் அக்குளத்துக்கு சென்று விக்கிரகத்தை வெளியே எடுத்து தூய்மைப்படுத்தி இன்று ஆலயம் அமைத்துள்ள இடத்தில் கொண்டு வந்து வைத்து வணங்கத் தொடங்கினர்.

### பக்திநெறி பெருகும் சூழல்

ஆயிரத்து தொளாயிரத்து எழுபத்திநாலாம் ஆண்டு ஊர் மக்கள் ஒன்றுபட்டு தர்மகர்த்தா சபையை அமைத்தனர். பயங்கர பிரதேசமாக மக்களால் கருதப்பட்ட இந்த இடத்தை பக்தி நெறி பெருகும் மையச் சூழல்



ஆக மாற்றிய பெருமை மிக்கவர்களில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கொக்குவில் குமாரசாமிப்புலவர், நல்லை ஆதீனம் முதலாவது குருமகா சன்னிதானம் (மணிஐயா) வில்லிசை வேந்தன் கணபதிப்பிள்ளை (சின்னமணி), போன்றவர்கள் அடங்குவர்.

ஆரம்பகாலத்தில் பொன். சோமசுந்தரக்குருக்கள் அவர்கள் பூசகராக ஆலயத்தை பொறுப்பேற்றார். அவர் கால் வைத்தகாலம் தொடக்கம் ஆலயம் சகல துறைகளிலும் வளர்ச்சி பெற்றது அக்காலத்தில் அவருடைய தலைமையில் அவரது மகன் சோ. சிவகுமாரசர்மா அவர்கள் பூசகராகக் கடமை புரிந்த காலத்தில் ஆலய வளர்ச்சிக்கு அரும்பணியாற்றினார். இப்பொழுது சோமசுந்தரக்குருக்களின் பேரன், அரவிந்த சர்மா (ரமேஸ்) பூசகராகப் பணியாற்றி வருகின்றார்.

ஆலயத்தைச் சூழ பல சமய மக்களும், பல சமூக மக்களும் வாழ்கின்றனர். அவர்கள் அனைவருக்கும் நடுவே அமர்ந்திருக்கும் அம்பாள் அருள் பாலிக்கிறாள். கருணையுள்ளம்கொண்ட தனபந்தர்களின் கொடையினாலும் கேட்கும் பொழுதெல்லாம மனமகிழ்வோடு அள்ளிக்கொடுத்த கரங்களின் கொடைகளினாலும் ஆலயம் திருக்கோயிலின் நிலையை அடைந்துள்ளது.

### தூய உள்ளத்துடன் தொண்டு

ஓர் ஆலயம் சகல நிலைகளிலும் வளர்ச்சி அடைந்து ஆன்மிகம் பரிணமிக்க வேண்டுமானால், ஆலயப் பூசகரும் ஆலய தொண்டர்களும் தர்மகர்த்தாக்களும், பதவி மோகம் இல்லாமல் தூய உள்ளத்துடன் திருப்பணியையே இலட்சியமாகக் கொண்டு, என்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அருள்மிகு
ஸ்ரீவீரமாபிடாரி அம்பாள்
அனுக்கிரகம்
சகல மக்களுக்கும்
கிடைக்க அருள் வேண்டி
நிற்கும்
அன்பு நெஞ்சங்கள்

எரிக் கணேஷ்
பிரபல மூக்குக் கண்ணாடி
விற்பனையாளர்
566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ சந்திரா
இன்டஸ்றீஸ்
209/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இ. தயாநிதி
பத்திரிகை முகவர்
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

க. இலங்கைகராசா
67, மாக்கட்,
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சுந்தர்ஸ்
ஸ்ரோர்ஸ்
கொக்குவில் மேற்கு,
கேணியடி,
கொக்குவில்.

என். கே.
அரிசி ஆலை
பிடாரி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

இரத்தினா
மோட்டோஸ்
55, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நியூ பாமா
ஹாட்வெயர்
ஸ்ரோர்ஸ்
11/3, அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

எஸ். ஆர்.
அன்னலிங்கம்
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

றோயல்
இன்டஸ்றீஸ்
221/1, ஆதமல்லி கட்டடம்,
ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.

தமிழீழத் தாய் பெற்றெடுத்த சகல சுருட்டுத் தொழிலாளர் குடும்பங்களுக்கும்
ஸ்ரீ வீரமாபிடாரி அம்பாளின் அருள் பாலிக்கட்டும் என வேண்டும்

★ வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ★
71, கே. கே. எஸ். வீதி, கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

விளம்பர இலக்கம்: (26602)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒன்றரை மாத அழகிய வெள்ளை நிற பொமனேரியன் ஆண், பெண் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. து சிகர் 958/8, K. K. S. வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். (26609)

## எழுதுவினைஞர் தேவை

எமது கல்வி நிலையத்துக்கு பெண் எழுதுவினைஞர் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும். 23-07-93 வெள்ளி காலை 10 மணிக்கு நேரில் வரவும். சிவாகி கல்வி நிலையம், இவன் வீதி. சாவகச்சேரி. (சி-5608)

## ENGLISH

N. C. E., G. A. Q., Degree (ESL) சகல பரீட்சைகளுக்கும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. Grammar, Literature, Spoken-English, V. N. Kandasamy (Consultant English Studies), 87, திருநெல்வேலி றோட் (ரயில் கடவைக்கு அண்மையில்), கொக்குவில். (6360)

## தேவை

அப்பம் தயாரிப்பதில் நன்கு அனுபவம் உள்ளவர் உடன் தேவை. நேரில் வரவும்: டவர் கோப்பிபார், வெலிங்டன் முன்பாக, யாழ்ப்பாணம். (சி-5498)

கோழித்தீன் வெற்றுப் பக்கற்றுகள் தேவை. தொடர்பு: ''மில்க்வைற்''. (சி-5496)

யாழ். நகரில் கற்பிக்கும் ஆசிரியர் குடும்பத்திற்கு யாழ். நகர் சுற்றுப்புறத்தில் சிறிய வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 544, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (26611)

நல்லூர் உற்சவம்:

## தூய்மை பேண கோரிக்கை

நல்லூர் ஆலயச் சூழலை அண்டியுள்ள வீதிகள் அனைத்தும் விசேட சுத்திகரிப்பு பணி மூலம் தூய்மைப்படுத்தப் பட்டு வருகின்றன. உற்சவ காலத்தில் தொடர்ந்து அப்பகுதியில் தூய்மையை பேண உதவுமாறு யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உற்சவகாலத்தில் ஆலயச் சூழலில் உள்ள பொதுநீர் நிலைகளின் சுகாதாரத்தை பேண வசதியாக சுகாதாரப் பகுதியினர் கிணறுகள் மற்றும் நீர்நிலைகளுக்கு குளோரின் போடும் பணியையும் மேற்கொள்வர் என்றும் அவர் தெரிவித்தார்

## பேரொளி....

(3ஆம் பக்கத் தொடர்ச்சி கடன் பணி செய்து கிடப்பது என்ற நிலைக்கு ஆளாக வேண்டும். எமது ஆலயத்தை பொறுத்தவரையில் இந்த நிலையைத்தான் அம்பாள் தந்துள்ளாள்.

இன்றைய காலகட்டத்தில் சைவமக்கள் வெட்கி தலை குனிய வேண்டிய நிலையில் ஆலயங்களில் தகராறுகள் நிகழ்ந்து வருகின்றன. ஆனால் நாங்கள், மீண்டும் மீண்டும் அம்பாளின் பாத கமலங்களில் வீழ்ந்து இப்படியான நிலையை அம்பாளின் சன்னிதானத்தில் உண்டாகக் கூடாது என வேண்டுகின்றோம்.

திருத்தேரில் இன்று பவனி வந்து அடியார்களுக்கு அருளாட்சி அள்ளிச்சொரியும் அம்பிகை, அடியார் உள்ளங்கள் மேன்மேலும் தூய்மை பெற அருள்வாளாக. ★

---

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 01 — 08 — 1928

உதிர்வு: 01 — 08 — 1992

## அமரர் இளையதம்பி இராசதுரை

(இளைப்பாறிய வரிமதிப்பீட்டாளர் - வருமானவரிக் கந்தோர் - கொழும்பு. யாழ்ப்பாணம்)

திதி: 22—07—1993

ஆருயிர் தெய்வமே! அன்புத் தந்தையே!!
ஆயிரம் சொல்லிடினும் அணையாத எம்விளக்கு
ஆண்டொன்று போயிற்றால் அணைத்திட முடியுமோ
எமதுயிர் தாங்கிடுமோ உமது உயிர் பிரிகையிலே
எண்ணற்ற நினைவலைகள் எமதுள்ளத்தில் ஏங்கிடுதே
எம்மை ஆறாத்துயரில் அனுதினமும் ஆழ்த்திவிட்டு
சகலதும் கசிந்துவிடும் உம் கனிவான மொழியினிலே
கண்கலங்கி நாம் நிற்க கடவுள் ஏன் அழைத்தானோ?
மரம் சாய்ந்தால் கிளைகள் தளிர்க்க முடியுமா?
உங்கள் அன்பையும், அரவணைப்பையும் இனி எங்கு- நாம் காண்போம்;
மீண்டும் வரமாட்டீர்களா என்று மனம் ஏங்கித்- தவிக்கின்றது.

உங்கள் பிரிவால் சிந்தும் கண்ணீரையே காணிக்கையாக்கி உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்

தங்கள் பிரிவால் துயருறும்;
அன்பு மனைவி: கமலாதேவி,
பிள்ளைகள்: சாந்தி, கௌரி;

யூனியன் கல்லூரி மேற்கு ஒழுங்கை,
தெல்லிப்பழை. (5998)

---

# 3ஆம் ஆண்டு சிரார்த்த தினம்



உதயம்: 25 — 07 — 1974

மறைவு: 25 — 07 — 1990

பிரம்மஸ்ரீ

## பாலசுப்பிரமணியக் குருக்கள் ரகுநாதசர்மா

திதி: 22 — 07 — 1993

ஓடியோடி வேலைகளை உவந்திடும் நீ
நாடி நற்கலைகளையும் பயின்றாயே
தேடியே காலன் வந்து உன்னுயிர் கொண்
டோடி ஆண்டு மூன்றானதே மறவோமே
கூடி நீ இறையுடன் அமரரானமர்வாயே.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதர, சகோதரிகள்,
அத்தான்மார், அண்ணி, மருமக்கள்.

263, ஸ்ரீ ஞானவைரவர் கோயில்,
சந்தோசம் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (26598)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் கார்த்திகேசு செல்லத்துரை

(வேலணை கிழக்கு)

தோற்றம்: 17-09-1917

மறைவு: 02-08-1992

திதி: 22 - 07 - 1993

தங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் நினைவுடன் வாழும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

66/1, இந்து மகளிர் ஒழுங்கை,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (26610)

---

# ஆண்டு நான்கிலும் ஆறவில்லை உன் நினைவு



செல்வன்

## வல்லிபுரம் விமலேஸ்வரன் (ஈசன்)

(லெப்டினன்ட் ஆஷா)

தாயகத்தில்: 11 — 01 — 1969

தாயக மீட்பினில்: 22 — 07 — 1989

தாயகத்தில் பிறந்த உன்னை ஈசன் என்றழைத்தோமே
தாயக மீட்பினிலே ஆஷா என்றழைத்தனரோ
தமிழீழம் காண்பதற்கு தலைவர் பணி
சிறந்ததென்று - நம்
தாயகத்தைப் பிரிந்து ஈழத் தாயகத்தில் சேர்ந்தாயோ!
அந்நியனின் அட்டகாசம் தென்மராட்சியில்
ஓங்குதென்று
அவசரமாய் ஓடிவந்தாய் முல்லைத்தீவு தனில் இருந்து
அந்நியனுடன் சமரிட்டு அவன் குண்டு
உன் நெஞ்சினிலே - அன்று
அய்யா கடை வீடொன்றில் உன் உயிரும் பிரிந்ததுவோ!
ஆயிர மாயிரம் வேங்கைகள் தொடர
அண்ணன் காட்டிய வழியினில் சென்றாய்
ஆண்டுகள் நான்கு தான் தாண்டிய போதிலும் -
என்றும்
ஈசன் உன்னை நாம் மறக்கவும் முடியுமோ?

- ஆஷா குடும்பத்தினர்.

''தாயகம்'',
''சமுத்திரதாரா''
சரசாலை வடக்கு. (26560)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழர் பிரச்சினையில் "பிஸ்னெஸ்"!

ஸ்ரீலங்காவின் முப்படையினருக்கு ஆயுதங்களைக் கொள்வனவு செய்தது குறித்து விசாரணை நடத்துவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது.

கடந்த ஐந்து வருடங்களாக ஸ்ரீலங்கா முப்படைகளுக்கு பத்தாயிரம் கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியான ஆயுதங்களும், போர்த்தளபாடங்களும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த இறக்குமதிகளில் ஊழல்கள் நிலவியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. கொள்வனவுடன் சம்மந்தப்பட்ட சட்டபூர்வமான கொடுக்கல் வாங்கல்களுக்குப் புறம்பாக கமிஷன்கள், வெட்டுகள் என்பன தாராளமாக இடம்பெற்றன என்பது நீண்ட நாள் குற்றச்சாட்டு. ஆயுத வியாபாரிகளும் உயரதிகாரிகளும் தங்களுக்கு கமிஷனும், வெட்டுகளும் பெறுவதற்காக தரமற்ற ஆயுதங்களை இறக்குமதி செய்ய உடந்தையாக இருந்தார்கள் என்பதும் எதிர்கட்சியினர் தரப்பில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டாகும்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் நாடாளுமன்றத்திலும் ஒலித்தது உண்டு. பிரேமதாசா காலத்து அரசாங்கம் அவற்றுக்குப் பதிலளிக்காமல் தந்திரமாக நழுவிய சந்தர்ப்பங்கள் பல. ஆயுதக் கொள்வனவு ஊழல்களில் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்த உயர்தர புள்ளிகளுக்கும், அரசியல் புள்ளிகளுக்கும் தொடர்புகள் உண்டெனக் கூறப்பட்டது. ஆனால் அவற்றைக் கருத்தில் கொள்ள அப்போதைய அரசு நாட்டம் செலுத்தியதாக இல்லை.

ஆனால் அதனைவிட முக்கிய விடயம் தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதற்காக, தமிழர்களை கொன்றொழிப்பதற்காக அரசு இத்தனை ஆயிரம் கோடி ரூபாவுக்கு ஆயுதம் கொள்வனவு செய்துள்ளதே என்பது தான்.

இந்த நாட்டின் ஒரு வருடத்திய முழுத் தேசிய வருமானத்தையும் விட பல மடங்கு பணம் கடந்த ஐந்து வருடங்களில் தமிழர்களுக்கு எதிராகப் படைபலத்தைப் பெருக்குவதற்காகச் செலவிடப்பட்டிருக்கிறது. அதன் அர்த்தம் என்ன?

அரசியல் தீர்வு என்பதற்கே இடமில்லை. இராணுவத் தீர்வின் மூலம் தமிழர்களை அழித்து விடுவதே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற முடிவுடனேயே பிரேமதாசா இந்தளவு பெரும் பணச் செலவில் படைகளை வளர்த்தார் என்பதே.

பிரேமா அரசின் இந்த முடிவைத் தெரிந்து கொண்ட முப்படைத் தளபதிகள், அவர்களுக்கு அடுத்த இரண்டாம் நிலைப் புள்ளிகள், பாதுகாப்பு அமைச்சின் ஏனைய அதிகாரிகள் ஆகியோர் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தினர். ஆயுத வியாபாரிகள், தரகர்கள் அரசியல் புள்ளிகளுக்கு தமிழரைக் கொன்றொழிக்கும் விவகாரம் ஒரு "பிஸ்னெஸ்" ஆயிற்று. அதனால் அவர்கள் போர் நிறுத்தப்படுவதை விரும்பவில்லை. போரைத் தொடர்வதற்கு ஊக்கமளித்தார்கள். அதற்கான செயற்கைக் காரணங்களைக் கண்டுபிடித்து சிங்கள மக்களையும் வெளி உலகத்தையும் ஏமாற்றும் கெட்டித்தனம் அவர்களுக்கு இருக்கிறது!

போர் நின்றால் தமது மேலதிக உழைப்பு கெட்டுப்போய் விடும் என்பதால் எப்போதும் அதனைத் தொடர்வதற்கான ஆலோசனைகளையே வழங்கினார்கள்; வழங்குகிறார்கள்.

தமிழர் பிரச்சினை விவகாரத்தில் இப்படியும் வியாபாரம் நடக்கிறது! அட உலகமே, நீ இதனை எப்போது புரிந்து கொள்வாய்?

# அரசியல் தீர்வு காணுவதற்கு
# அரசு முயற்சித்து வருகிறது

### நாடாளுமன்றத்தில் ரணில்

கொழும்பு, ஜூலை 22

வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணுவதற்கு அரசு முயற்சித்து வருகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அரச படைகள் தொடர்ந்து இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன என்றும் அவர் கூறினார்.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா கொலை சம்பந்தமான விசாரணை தொடர்கின்றது எனக் கூறிய பிரதமர், விசாரணை முடிவுற்றதும் அது தொடர்பான அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

டென்சில் கொப்பேகடுவ கொலை தொடர்பாக சர்வதேச ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கை நாடாளுமன்றத்தில் பருவகால அறிக்கையாக வெளியிடப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

(ஓ எ)

## பிரதி பொலீஸ்மா அதிபர் 40 பேர்!

கொழும்பு, ஜூலை 22

புதிதாக 12 பிரதிப்பொலீஸ்மா அதிபர்கள் நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் மூவரும் இவ்வருட இறுதிவாக்கில் பதவி விலகலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

புதியவர்களின் நியமனத்துடன் தற்சமயம் பணிபுரிந்து வரும் பிரதிப்பொலீஸ்மா அதிபர்களின் எண்ணிக்கை 40ஆக அதிகரித்துள்ளது.

(இ-எ)

## ரூபா 50 லட்சம் கிழிந்த நோட்டுக்கள்
### இங்கிருந்து கொழும்புக்கு

யாழ்ப்பாணத்திலிருந்து 50 லட்சம் ரூபா கப்பலில் கொழும்பு கொண்டு செல்லப் படுகிறது!

இதென்ன, யாழ்ப்பாணத்தில் திரவப் பணத்துக்குப் பற்றாக்குறை நிலவும்போது இங்கிருந்து ஏன் பணத்தை அனுப்பவேண்டும் என்று நினைக்கிறீர்களா?

நேற்றுக் கொழும்பு சென்ற குமாரி கப்பலில் 50 லட்சம் ரூபா பெறுமதியான கிழிந்த நாணய நோட்டுகள் அனுப்பப் பட்டுள்ளதாக இலங்கை வங்கி யாழ். கிளை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்குக் கிழிந்த நோட்டுகளும் மற்றொரு தலையிடியாகிவிட்டது.

கிழிந்த நோட்டுக்களைப் பெறுவதற்கு வர்த்தகர்கள் பின்நிற்கிறார்கள். அதனால் அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்.

இது குறித்து இலங்கை வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளரிடம் கேட்டபோது, இலங்கை வங்கியில் கணக்கு வைத்திருப்போர் தம்மிடம் உள்ள கிழிந்த நோட்டுக்களை தமது வங்கிக் கணக்கில் இட்டு மாற்றிக்கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

வங்கியில் கணக்கு இல்லாதவர்கள் தம் வசம் உள்ள கிழிந்த நோட்டுக்களை கணக்கு உள்ளவர்களிடம் கொடுத்து மாற்றுவித்துக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்

[அ-162]

### வர்த்தக திணைக்கள கிளை

நல்லூர் கந்தன் உற்சவ காலத்தில் மக்கள் குறைந்த விலையில் பொருள்களை கொள்வனவு செய்ய வசதியாக வர்த்தகத் திணைக்களத்தின் கிளை ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முதல் நல்லூரில் இயங்க விருக்கிறது.

ஆலய மேற்கு வீதியில் இயங்கவிருக்கும் இக்கிளையில் அத்தியாவசியப் பொருள்கள் சகாய விலையில் விற்பனையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-3)

## கிளாலிப் பயணத்தில்! கைமாறும் பொதிகள்

கிளாலிப் படகுப் பயணத்தின் போது மக்கள் தமது பொதிகளைப் பறிகொடுக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதாகப் புகார் கூறப்படுகிறது.

பயணிகள் தமது பொதிகளை நனையாமல் எடுத்துச் செல்வதற்காக உரப்பைகளில் அவற்றைப் போட்டு எடுத்துச் செல்கின்றனர்.

பொதிகள் எல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரியாக இருப்பதால் அவை கைமாறி விடுவதாக பயணிகள் தெரிவித்தனர்.

இன்னும் சிலர் திட்டமிட்டு பொதிகளை மாற்றி எடுத்துச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

(ஒ)

## உப்புக் கூட்டுத்தாபன ஊழியருக்குச் சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 22

வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன நிரந்தர ஊழியர்களின் 92ஆம் ஆண்டுக்கான சம்பளப் பணம் முழுத் தொகையாக உப்புக் கூட்டுத்தாபன தலைமைச் செயலகத்தால் மக்கள் வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பிராந்திய முகாமையாளர் திரு. தி. ஸ்ரீராமநாதன் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கி மூலம் சம்பளப் பணம் ஊழியர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் —

சம்பந்தப்பட்ட நிரந்தர ஊழியர்கள் தமது வங்கிக் கிளையுடன் தொடர்பு கொண்டு அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

தங்கள் சம்பளக் கணக்கில் முரண்பாடு இருப்போர் அல்லது சம்பளம் கிடைக்காத ஊழியர்கள் அதுபற்றி எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் உப்புக் கூட்டுத்தாபன பிராந்திய செயலகத்தில் அலுவலக நாட்களில் தொடர்பு கொண்டு தம்மிடம் தெரிவிக்குமாறும் —

விரைவில் தாம் கொழும்பு செல்லும்போது அதுபற்றி தலைமைச் செயலகத்துக்கு முறையிட இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசுக்கு எதிரான சதி குறித்து
## தகவல் கொடுக்கத் தவறிய குற்றச்சாட்டின் விடுதலை

கொழும்பு, ஜூலை 22

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் செய்யப்படும் சதி தொடர்பாக தமக்குத் தெரிந்த தகவல்களை மேலதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தத் தவறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் விசாரணையின் பின்னர் எதிரியான இராணுவக் கப்டன் தர்மஸ்ரீ நிசங்காவை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சோமவன்ஸ அமரசிங்காவும், சமன்பியசிரி [illegible] னாண்டோ ஆகியோர் [illegible] செய்து வருவது தெரிந்திருந்தும் அதுபற்றிய தகவல்களை மேலிடத்துக்கு அறிவிக்கத் தவறியதாக எதிரி மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

விசாரணையின் போது எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் பலவந்தமாக அளிக்கப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, எதிரி மீதான குற்றச்சாட்டை வாபஸ் வாங்குவதாக அரசதரப்புச் சட்டத்தரணி அறிவித்தார். அதனைத் தொடர்ந்து நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

### ஜெயலலிதா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர் ஜெயலலிதாவை இரண்டு தடவைகள் சந்தித்துப் பேசினார்.

உண்ணாவிரதத்தை முடித்த பின்னர் முதலமைச்சர் ஜெயலலிதா தமது போராட்டம் முழு வெற்றியடைந்ததாக தெரிவித்தார்.

மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வழங்கிய சில உறுதிமொழிகளை அடுத்து ஜெயலலிதா காலவரையறையற்ற உண்ணாவிரதத்தைக் கைவிட்டதாக மாநில நிதி அமைச்சர் நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

காவிரி நீர்ப்பிரச்சனை பற்றிய நடுவர் மன்ற இடைக்காலத்தீர்ப்பை நடைமுறைப் படுத்துவது குறித்துக் கண்காணிக்க மத்திய அரசு ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க ஒப்புக் கொண்டுள்ளது என்றும்—

இந்த குழு அமைக்கப்படுவது தமிழகத்துக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் என்றும் செல்வி ஜெயலலிதா செய்தியாளர்களிடம் கூறினார்.

(இ-எ)

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு 500 பேர் கைது

மட்டக்களப்பில் தன்னாமுனை, மொறக்கொட்டாஞ்சேனை, கொம்மாதுறை ஆகிய கிராமங்கள் சென்ற 19ஆம் திகதி அதிகாலை பாரிய சுற்றிவளைப்புக்கு உள்ளாகின.

இச்சுற்றிவளைப்பின் போது 500க்கும் மேற்பட்ட ஆண்கள் ஸ்ரீலங்கா அரச படையால் கைதுசெய்யப்பட்டு கொம்மாதுறை ஸ்ரீலங்கா இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் பொலீஸாரும் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

(இ-162)

## தீவுப்பகுதிக்கு விஜயம்

அனைத்துக்கட்சிகளின் குழு ஒன்று கடந்த திங்கட்கிழமை முதல் தீவுப் பகுதியில் விஜயம் மேற்கொண்டுள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதிகளில் உள்ளவர்களின் வாழ்க்கை நிலைமைகளையும், அபிவிருத்திப் பணிகளையும் பார்வையிடவே அந்தக் குழுவினர் அங்கு விஜயம் செய்துள்ளதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

நரோமா கப்பல் மூலம் வந்த இக்குழுவினர் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை தீவுப் பகுதியில் தங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-5)

### இனப்பிரச்சினையை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுவில் இருந்து விலகிக் கொள்ள முடிவு செய்தன. முதலில் இ. தொ. கா விலகியது. அதனைத் தொடர்ந்து ஏனைய தமிழ்க் குழுக்களும் விலக முடிவு செய்தன. இப்போது முஸ்லிம் காங்கிரஸும் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்து வருகிறது.

இதற்கிடையே வடக்கு-கிழக்கு இணைப்பு அவசியமா என்பதனைக் கண்டறியக் கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தவேண்டும் எனவும் தெரிவுக்குழு முடிவு செய்தது.

அதனைத் தொடர்ந்து தமிழ், முஸ்லிம் கட்சிகள் இல்லாத நிலையில் தெரிவுக்குழு இப்போது இயங்குகிறது. கடந்த பல கூட்டங்களுக்கு தமிழ்க் குழுக்கள் சமூகமளிக்கவில்லை.

தெரிவுக்குழு நேற்றுக்கூடிய போது, தனது அறிக்கையை இம்மாதம் 27 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

குழுவின் அமர்வுகளை தமிழ், முஸ்லிம் கட்சிகள் பகிஷ்கரித்து வரும் நிலையில் இக்குழு நீடிப்பதில் அர்த்தமே இல்லை என்று குழுவைச் சேர்ந்த சில வட்டாரங்கள் கூறிவருகின்றன.

நேற்று நடந்த குழுவின் கூட்டத்தில், வடக்கு - கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைப்பதற்கு கூட்டத்தில் சிங்கள எம்.பிக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்; என்று அறிவிக்கப்படுகிறது.

(அ-எ)


## வெற்றுச் சாராயப் போத்தல், பெட்டி
## தேவை

எமது சந்தைப்படுத்தல் பகுதிக்கு வெற்றுச் சாராயப் போத்தல்கள், பெட்டிகள் தேவை. விலை பேசித் தீர்க்கலாம். வைத்திருப்போர் தொடர்பு கொள்ள வேண்டிய இடம்,

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாசம்.
499, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/5501)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம்
ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தான
(ஆடிப்பூர) சுவர்ணாம்பிகை

## சித்திரத்தேர் திருவிழா

இன்று காலை 7 மணிமுதல் அபிஷேகம், காலை திருவிழாவும் மாலை 5 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், 7 மணிக்கு மின் தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட சித்திரத்தேரில் உலாவும் நடைபெற உள்ளன. விசேட மேளக்கச்சேரிகளும் இடம்பெறும். அனைவரும் மாலை தேர் உலாவில் கலந்து அம்பாள் அருள்பெற்று சிறப்புறுமாறு வேண்டுகிறோம்.

இப்படிக்கு
தேவஸ்தானத்தார்
சர்வேஸ்வரக்குருக்கள்.

(6601)

---

உ

சாவகச்சேரி நகர் - வாரிவனேஸ்வரம்
அருள்தரு அமிர்தபாஷினி அம்பிகா
சமேத வாரிவனநாத சுவாமி

## கும்பாபிஷேக மண்டல பூர்த்தி விழாவும்

பிரதம சிவாச்சாரியார்

## பாராட்டு விழாவும்

23 – 07 – 1993

(1008) சங்காபிஷேகம்:
23 – 07 – 1993 வெள்ளிக்கிழமை பகல் 10மணி

தீப பூஜை: மாலை 4மணி
(சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் கலந்து கொள்ளவும்)

பாராட்டு விழா: மாலை 5மணி

தலைவர்: கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன்
(தலைவர், இந்துநாகரிகத்துறை யாழ். பல்கலைக்கழகம்)

பாராட்டிக் கௌரவிக்கப்படுபவர்:
பிரதம சிவாச்சாரியார் -
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
புன்னாலைக்கட்டுவன்

அறிஞர்கள் பலரின் பாராட்டுரைகள், சிறப்புரைகள் இடம்பெறும்.

இரவு விசேட நிகழ்ச்சி: மாலை 6 30 மணி
★ இன்னிசைக் கச்சேரி ★
அளவையூர் பார்வதி சிவபாதம் குழுவினர்

இரவு 8-00 மணி — மேளக்கச்சேரி
★ கல்வியங்காடு முத்துலட்சுமி குழுவினர்

அனைவரும் வருக! திருவருள் பெறுக!!

விழாக் குழுவினரும்,
ஆலய தர்மகர்த்தாவும்.

விளம்பர அன்பளிப்பு:
சன்றயிஸ் ரேடேர்ஸ், சாவகச்சேரி.

(26612)

---

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 09 – 04 – 1956



உதிர்வு: 22 – 07 – 1984

### து. பஞ்சலிங்கம் (மனோ மாஸ்டர்)

தீயிட்ட புடமானாய்
நீறில் பூத்த மலரானாய்
எம்மிதய தெய்வமே — நீ
மலர் பூத்த மலர் தான்

குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள்.

கொம்மாந்துறை,
வல்வெட்டித்துறை.

(26601)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 22-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

## நல்லூருக்கு சித்திரத் தேரில் கொடிச் சீலை

யாழ்ப்பாணம், ஜூலை 22

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கொடிச்சீலை நாளை வெள்ளிக்கிழமை ஆலயத்துக்கு எடுத்து வரப்படும்.

தொன்று தொட்டு வழங்கி வரும் மரபுப்படி கொடிச்சீலை நாளை காலை நல்லூர் சட்டநாதர் வீதியில் உள்ள வேல்முருகன் ஆலயத்தில் இருந்து சித்திரத் தேரில் நல்லூர் கோயிலுக்கு எடுத்து வரப்படும்.

நாளை மறுதினம் சனிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலய உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது என்பது தெரிந்ததே.

(ஓ-5)

## நாளை

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை உடுப்பிட்டி கீதாலயா இசைக் குழுவின் மெல்லிசை இடம்பெறும்.

(க)

## பரி. யாக்கோபு ஆலய ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 22

நல்லூரர் பரி. யாக்கோபு ஆலயத்தின் 165 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டிய உயிர் மீட்சிக் கூட்டங்கள் நாளை வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்களும் நடைபெறும்.

நாளை பிற்பகல் 3.00 மணிக்கும் சனிக்கிழமை காலை, 8.30 மணிக்கும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

(இ)

## வெளிச்சம் வந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 22

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான "வெளிச்சம்" கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் ஜூலை மாத இதழ் வெளிவந்துள்ளது.

கரும்புலிகள் நாளையொட்டி தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கிய "கரும்புலிகள் எங்கள் போராட்ட மரபில் புதியதோர் வடிவம்" என்னும் தலைப்பிலான செய்தி உட்பட பல்வேறு அம்சங்களுடன் இந்த இதழ் வெளிவந்துள்ளது.

(இ-5)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 22

கொழும்பில் சிகிச்சைபெறச் செல்ல வைத்திய நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்ட நோயாளர்களும், அவர்களுக்கு உதவியாகச் செல்பவர்களும் நாளை காலை 8 மணிக்கு தமது காரியாலயத்துக்குச் சமுகமளிக்குமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நோயாளிகள் தம்முடன் சிபார்சுக் கடிதம், தேசிய அடையாள அட்டை என்பனவற்றையும் எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-5)

## திருத்தம்

காரைநகர் வலந்தலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக் குழுத் தேர்தல்-1993 சம்பந்தமாக நேற்றைய உதயனில் பிரசுரமான விளம்பரத்தில்—

நியமனம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி 07-80-1993 [illegible] 07–08–1993 என்று திருத்தி வாசிக்கவும்.

---

புங்குடுதீவு - பெருங்காடு
ஸ்ரீ முத்துமாரி அம்பாள்
ஆலய வருடாந்த

## மஹோற்சவ தினங்கள்

கத்துதிரைக் கடல்சூழும் பூங்குடியில்
கழலடியே தஞ்சமெனும் அடியவர்க்கு
சித்தியெலாம் தந்தருளி சேவடிப் பூஞ்
செஞ்சரணம் தந்தருளும் முத்துமாரி

எத்திசையும் போற்றுமுன்றன் எழிற்பதத்தை
என்று நாம் கண்டு பேரின்பம் கொள்வோம்?
முத்தமிழ் விழாவெடுத்துன் பூஜை காண
முத்துமாரித் தாயே... அருள்வாய் நீயே!

| | | |
|---|---|---|
| 22—7—1993 | — | நாகசதுர்த்தி |
| 23—7—1993 | — | ஆடிப்பூரம் |
| 24—7—1993 | — | கொடியேற்றம் |
| 1—8—1993 | — | தேர் |
| 2—8—1993 | — | தீர்த்தம் |
| 3—8—1993 | — | பூங்காவனம் |

★ அடியார்களின் நலன் கருதி மஹோற்சவ தினங்கள் அறிவிக்கப்படுகின்றன.

— புங்குடுதீவு ஸ்ரீமுத்துமாரி அம்பாள்
ஆலய பரிபாலன சபை.

(26615)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னம்பலம் மரகதவல்லி
(இளைப்பாறிய ஆசிரியை)

கொழும்புத்துறை மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட மரகதவல்லி காலமாகிவிட்டார். அன்னார் பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவராசா, இராமநாதன் (பிரதம வீதிதர் திட்டமிடல் பிரிவு, யாழ். மாநகராட்சி மன்றம்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், பூரணம், ஆனந்தராசா (முன்னாள் தொழில் நுட்பவியலாளர் யாழ் / பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுஷா, சுதர்சா, தனஞ்சயன், கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற பாக்கியம், செல்லம்மா, கந்தையா, கனகசபை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (22 07-93) வியாழன் பிற்பகல் 1.00 மணியளவில் 81/1, கொழும்புத்துறை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

தகவல்:
பொ. இராமநாதன்
(மகன்)

81/1, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[26622]

### தங்கலிங்கம் சிறீபதி (சுட்டா)

சிறீபதி (சுட்டா) கனடாவில் 18 - 7 - 93 அன்று அகாலமரணமானார். அன்னார் புன்னாலைக்கட்டுவன் வடக்கை சேர்ந்தவரும், தற்பொழுது இல. 13, பதினொராம் ஒழுங்கை, கொழும்பு - 13 இல் வசிப்பவர்களுமான சின்னத்தம்பி தங்கலிங்கம் (C W.E), பொன்னம்மா (இளைப்பாறிய இ.சே. அலுவலர்), தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், மதிவதனன் (களுத்துறை முஸ்லிம் ம.வி), தனஞ்சயன் (சுவிஸ்லாந்து), நிரஞ்சனி (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும், மலைமகள் (களுத்துறை முஸ்லிம் ம.வி), உமைபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. திருமதி நா. சீனித்தம்பி
(பெரியதந்தையும், தாயும்)

செந்தா பஸ் உரிமையாளர்,
நீர்வேலி வடக்கு.

[26623]

### தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கபத்தர்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடி வைத்திலிங்கம் பத்தர் 16-07-1993 அன்று கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை -கமலாம்பிகை தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற அருளம்மா, சிவரெத்தினம் ஆகியோரின் அன்புக் கணவரும், சத்தியமூர்த்தி (டென்மார்க்), தனலெட்சுமி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசின் மாமனாரும், ரகுராம், ரஜீவன், நிரோஷன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சண்முகம் கிருஷ்ணசாமி, காலஞ்சென்ற பாலசிங்கம், மகாலெட்சுமி, அன்னலெட்சுமி ஆகியோரின் சகோதரரும், சிவானந்தன், கதிர்காமத்தம்பி, நடராசா, இராசரெத்தினம், காலஞ்சென்ற இராசலெட்சுமி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (22-07-1993) கொழும்பில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. தா. கிருஷ்ணசாமிப்பத்தர்
(சகோதரர்)

628/2, நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்,

(26621)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org